July 4, 2011

## Honble Chief Minister reviewed the progress of activities of Cooperation, Food and Cosumer Protection Department



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.7.2011) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.